ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==========================================================================================

ஸ்வாமி தேசிகன் நூற்றுக்கணக்கான க்ரந்தங்களில் நம் நன்மைக்காக ஆயிரக் கணக்கான உபதேசங்களைப் பண்ணியிருக்கிறார். அவற்றுள் முக்கியமான ஆயிரம் அறிவுரைகளை இப்போது பார்ப்போம். ஒவ்வொன்றுக்கும் அவருடைய ஸூக்திகளை மேற்கோள் காட்டி எளிய தமிழ்ப் பொருளுடன் இப்போது அநுபவிப்போம்.

## முதல் நூறு

(இதிலுள்ள நூறு தலைப்புகளும் ‘அ’ என்கிற எழுத்தில் தொடங்கும்.)

**அறிவுரை 1. அலராள் கேள்வன் அடி பணிமின்.**
**லக்ஷ்மீபதியின் திருவடியைப் பணியுங்கள்.**

இப்படி ச்ரிய:பதியான நாராயணன் திருவடிகளே
உபாயதசையிலும் பலதசையிலும் உபஜீவ்யங்கள்.

\- ரஹஸ்யத்ரயஸாரம், நிகமனாதிகாரம்

இது ரஹஸ்யத்ரயஸாரம் என்கிற பெரிய மணிப்ரவாளக் கிரந்தத்தின் கடைசி உரைநடை வாக்கியம். அந்த முழு நூலில் ஸாரமாகச் சுருங்கச்சொன்ன மணிமொழி. இதன் அர்த்தம்:-

இப்படி மேற்கூறிய விதமாக, திருமாலின் திருப்பாதங்களே, உபஜீவ்யங்கள். (அதாவது பெருமாள் திருவடிகளே நம் பிழைப்புக்கு மூலங்கள்). உபாயதசையிலும்

சரி, பலதசையிலும் சரி, அவர் திருவடிகளை அண்டியே நம் ஜீவனம். உபாயநிலையில், அதாவது சரணாகதி பண்ணும்போது அத்திருவடிகளையே பற்றுகிறோம். பிறகு அதன் பலன் கிடைக்கையில், அதாவது மோக்ஷநிலையிலும், அவன் திருவடிகளையே பற்றிக்கொண்டு வாழ்கிறோம். இரண்டு நிலைகளிலுமே பிராட்டியுடன் சேர்ந்த அவன் திருவடிகளே உபஜீவ்யங்கள்.

ச்ரிய:பதியாய் இருத்தலும் நாராயணன் என்ற பெயரும் அவனுக்கே அசாதாரணமானவை. வேறெந்தத் தேவருக்கும் இல்லாமல் அவனுக்கு மட்டும் உரித்தானவை. அவன் திருவடி துணைகொண்டு அவன் திருவடி அடைகிறோம். இது சரணாகதி மந்த்ர ஸாரம். திருவடிகளே என்றவிடத்தில் ஏகாரம் நமக்கு வேறு புகலோ வேறு பயனோ இல்லாமையை அறிவிக்கிறது. அவன் திருவடியை ஒழிய வேறு வழியுமில்லை. வேறு புருஷார்த்தமும் வேண்டாம்.

*****************



ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம்.
ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிகன்